பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 02 ஞாயிற்றுக்கிழமை 16.06.2024 கதிர் 221

# தேர்தல் கால பரப்புரையாக 13ஐ பயன்படுத்துவதை நிறுத்துங்கள்

## நாமல் ராஜபக்ச சீற்றம்

தேர்தல் கால பிரசாரமாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை பயன்படுத்துவதை அரசியல் தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார். கொழும்பில் நேற்று ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று வவுனியாவில் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெறுகின்றது. இந்தக் கூட்டத்திலும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள கட்சியின் வழக்குத் தொடர்பிலும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும்தான் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த மாதம் கூடிய கட்சியின் மத்திய செயற்குழு, தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், அவற்றைத் தீர ஆராய்ந்து பார்த்த பின்னரே இறுதி முடிவு எடுப்பது என்று தீர்மானித்திருந்தது. இருந்தாலும் இன்றைய கூட்டத்தின் நிகழ்ச்சிநிரலிலும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவேளை, இன்றைய கூட்டத்தில் கட்சியின் நிலைப்பாடு குறித்து ஏதாவது தீர்க்கமான நிலைப்பாடு எடுக்கப்படுமோ ☞ 2

## இ.தொ.க. அரசியல்வாதி ஐக்கிய மக்கள் சக்தியில்

மத்திய மாகாண சபையின் உபதவிசாளராக இரண்டு தடவைகளும், அவைத் தலைவராகப் பதவி வகித்தவரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உப தவிசாளருமான துரை மதியுகராஜா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார்.

25வருடங்களுக்கும் மேலாக கண்டி மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதான அமைப்பாளராகவும் பணியாற்றியுள்ள அவர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அரசியல் பயணத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் நேற்று அக்கட்சியில் இணைந்துள்ளதாக, ஐ.ம.ச. ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வருடங்களுக்கும் மேலான பலதரப்பட்ட அரசியல் மற்றும் தொழிற்சங்க அனுபவத்துடன் கூடிய முன்னணி தொழிற்சங்கத் தலைவரும் அரசியல்வாதியுமான இவர், அரசியல் மற்றும் ☞ 2

### கடனை மீளச் செலுத்தாத

## பெரும் செல்வந்தர்கள் மீது பதவிக்கு வந்ததுமே வழக்கு

### எதர்க் கட்சித் தலைவர் அறிவிப்பு

பெரும் செல்வந்தர்கள் உரியவாறு தமது கடன் தொகையை மீளச் செலுத்தாவிட்டால், அவர்களுக்கு எதிராக உச்சபட்ச சட்ட நடவடிக்கைகளைஎடுப்போம் எனவும், நட்புவட்டார செல்வந்தர்களுக்குஎம்மிடம் பாதுகாப்பு கிடையாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 240 ஆவது கட்டமாகஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை, குருநாகல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் திறமைகளை வெளிப்படுத்திய பாடசாலை நடனக் குழுவிற்கு ஆடைகளை கொள்வனவு செய்து கொள்வதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

அங்கு அவர் உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டு மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்துவரும் வேளையில், புதிய வகை வரிகளை ☞ 2

## மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் எதிர்ப்பு

தலைமன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கவயன் குடியிருப்பு பகுதியில் அடாத்தாகப் பிடிக்கப்பட்ட காணியில் கனிய மணல் அகழ்வு இடம்பெற இருந்த நிலையில் நேற்றுக் காலை 10 மணியளவில் ஒன்று கூடிய அப்பகுதி மக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

தலைமன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கவயன் குடியிருப்பு பகுதியில் சுமார் 160 ஏக்கர் பனை மரங்களைக் கொண்ட குறித்த காணி சட்ட விரோதமாக பிடிக்கப்பட்டுக் குறித்த காணி அடைக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணி இந்தியத் தனியார் கம்பெனி ஒன்றிற்குக் கனிய மணல் அகழ்வுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குறித்த காணியில் உள்ள பல நூற்றுக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டு, கனிய மணல் ☞ 8

## தீர்வு கிட்டாவிடின் போராட்டம்தான் தொடருந்து அதிபர் சங்கம் அறிவிப்பு

சேவைத்துறையில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு அரச சேவை ஆணைக்குழு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை சாதகமான தீர்வினை வழங்காவிடின் எவ்வித பேச்சு ஈடுபடாமல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என தொடருந்நது அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

பதவி உயர்வு, ஆட்சேர்ப்பு ஆகியவற்றில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி தொடருந்து நிலைய அதிபர் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதாக அறிவித்திருந்தனர்.

பகல் 2 மணிக்கு முன்னர் சாதகமான பதில்கிடைக்கவேண்டும் என்றும் தொடருந்து சாரதிகள் சங்கத்தின் போக்குவரத்து அமைச்சுக்கு காலவகாசம் வழங்கியிருந்தனர்.

தொடருந்து அதிபர் சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் புகையிரத திணைக்களத்தின் நிறைவேற்று சபை நேற்றுமுன்தினம் மாலை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. ☞ 2

## நாணய நிதிய உடன்பாட்டை தொடரவேண்டும் இலங்கை

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை இலங்கை தொடரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இலங்கைத்தமிழ்அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

நாட்டில் தேசிய தேர்தல்களின் பின்னர் ஆட்சியாளர்கள் மாறினாலும் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று அதன் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ப்ரூவர் வலியுறுத்தியுள்ளார். எனினும், சில அரசியல் கட்சிகள் தமது ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடனான ☞ 8

## இலங்கை கிரிக்கெட் சபைக்கான யாப்பு வரைவு ஜனாதிபதியிடம்

இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய யாப்புக்கான சட்டமூலம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர் கே.டீ. சித்ரசிறி தலைமையிலான நிபுணத்துவக்குழுவினர் இந்த சட்ட மூலத்தைத் தயாரித்து, ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இலங்கை கிரிக்கெட் சபை எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்து தேடியறிந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக அமைச்சரவையினால் 06.11.2023 திகதியன்று அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த அமைச்சரவை உபகுழுவில், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தலைமையில், மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அந்தக்குழு கிரிக்கட் துறையுடன் தொடர்புபட்ட சகல தரப்பினருடனும் ஆலோசித்து 08.01.2024 திகதி அறிக்கையொன்றை சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில் இலங்கை கிரிக்கட் கட்டமைப்பை முழுமையாக மறுசீரமைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. இதற்கமைய தேசிய ஆண்கள், பெண்கள் அணிகள், 19 ,17 வயதுகுட்பட்ட பிரிவு அணிகள் உட்பட பல்வேறு மட்டத்திலான கிரிக்கெட் நிர்வாகம், பயிற்சி மற்றும் இருப்பு, வெளிப்படைத் தன்மை, தொழில் தன்மை மேம்பாடு, திறன், ☞ 2

## நெல்லக்குள மலைக்கு நீதிவான் நேரில் சென்று நேற்று ஆராய்வு

### மலையில் கல்லுடைத்தல் தொடர்பாக

மூதூர் கிழக்கு சேனையூர் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நெல்லிக்குள மலை பிரதேசத்தில் மலை உடைப்பதால் தமக்கு பாதிப்புள்ளதாக கல் மலை உடைக்கும் போது எதிர்ப்பு தெரிவித்த 10 பேர் கடந்த 11ம் திகதி சம்பூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு 12 ஆம் திகதி மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவர்கள் அனைவரும் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

இது தொடர்பான வழக்கை மூதூர் நீதிமன்றில் சம்பூர் பொலிஸார் தாக்கல் செய்ததுள்ளதுடன் சம்பவஇடத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டு ஆராய்வதாகவும் நீதிபதி தெரிவித்திருந்தார். அந்த வகையில் இன்று குறிப்பிட்ட இடத்திற்கு மூதூர் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டுச் சென்றார்.

குறித்த மலை உடைப்பின் காரணமாக அருகில் உள்ள விவசாயம், போக்குவரத்து, கால்நடை வளர்ப்பு போன்றவற்றுக்கு பாதிப்பிருப்ப ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்று கேட்டதற்கு, மாவையர் இருக்கும் வரைக்கும் கட்சி என்றைக்குஅப்படியானமுடிவுகளை எடுத்திருக்கின்றது, வரட்டும் பார்க்கலாம் என்றுதான் கடைசி வரைக்கும்இழுபடும்என்கிறார்கள் மத்தியசெயற்குழு உறுப்பினர்கள்.

.................

அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் போய் என்ற மாதிரி, நேற்றைய தினம் ஊடகம் ஒன்றில் வெளியாகிய செய்தியும் இருந்தது. தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தொடக்கத்திலிருந்து இயங்கி வந்த யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட காட்சி ஊடகம் ஒன்றின் அச்சுப் பதிப்பில் தலைப்புச் செய்தியாக வந்திருந்தது அந்தச் செய்தி. யாழ்ப்பாணம் வந்த இந்திய அதிகாரிகள் தமிழ் தலைவருடன் இரகசியமாகப் பேசினர் என்றும் தமிழ் பொது வேட்பாளர் குறித்தும் பேசினர் என்றும் அதில் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தமது பின்னணி ஏதும் இல்லை என்று அடித்துச் சத்தியம் செய்யாத குறையாக இந்தியத் தூரகம்கூறிவரும்நிலையில், தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை அழைத்து தமிழ் பொது வேட்பாளர் என்கிற மாய மானுக்குப் பின்னால் ஓடவேண்டாம் என்று இந்தியத் தூதுவர் அறிவுறுத்தியிருந்த நிலையில், இந்திய அதிகாரிகள் இரகசியமாக யாழ்ப்பாணம் வந்து தமிழ் தலைவருடன் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசினார்கள் என்பது ஆச்சரியமூட்டுவதாக இருந்தது. முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருந்தது.

சரி என்னதான் நடந்தது என்று தேடிப்பார்த்தேன். கடைசியில் பார்த்தால் ''அடச் சீ...'' என்று முடிந்துவிட்டது விவகாரம். உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கப் பொன்விழா மற்றும் அதன் 17ஆவது சர்வதேச மாநாடு என்பன வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் சொகுசு விடுதி ஒன்றில் இடம்பெற்று வருகின்றது. அதில் கலந்துகொள்வதற்காக தமிழ்நாட்டில் இருந்து பல அறிஞர்களும் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். பலாலி விமான நிலையம் ஊடாகவே அவர்கள் அழைத்து வரப்பட்டிருந்தார்கள்.

அப்படி வந்தவர்களில் ஒருவர் வேலூர் தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் நிறுவுனர் மற்றும் வேந்தர் முனைவர் ஜி.விசுவநாதன். இவர் தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் தனிப்பட்ட நண்பர். தமிழ்நாட்டில் இந்திய காங்கிரஸ் கட்சியில் ஒரு காலத்தில் இருந்தவர். ஆனால் பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கி கல்விப் புலத்தில் மட்டுமே செயற்பட்டு வருகின்றார். இப்போது அவர் அரசியலில் எந்த ஈடுபாடும் கொண்டவரல்ல. பிரேமானந்தா சுவாமிகளின் பக்தரான அவர், அதனால் விக்னேஸ்வரனுடன் தனிப்பட்டநட்புபாராட்டிவருகின்றார் என்று தெரியவந்தது.

யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் தனது நண்பரையும் பார்த்துப் பேசிவிட்டுச் செல்லாம் என்று நினைத்த அவர், விக்னேஸ்வரனை அவரது இல்லத்திற்குச்சென்று அளவளாவி விட்டுத் திரும்பிச் சென்றார். இதைப் பார்த்துவிட்ட யாரோ விளக்கமின்றி இந்தியாவிலிருந்து அதிகாரிகள்வந்துவிக்னேஸ்வனைச் சந்தித்துவிட்டுத் திரும்பினர் என்று செய்தியைஅடித்துவிட்டுவிட்டார்கள். அதுகூடப் பரவாயில்லை, தமிழ் பொது வேட்பாளர் குறித்தும் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டதுதான் 'ஹைலைட்'

முன்னாள் முதலமைச்சரின் இல்லத்தில் நடந்ததோ முற்றிலும் வேறானது. இ-ருவரும் பரஸ்பரம் சுக நலன்களை விசாரித்துக் கொண்டதுடன் தத்தமது நூல்களையும் பரிமாறிக் கொண்டனர். அதற்கு மேல் அந்தச் சந்திப்பில் அரசியல் எதுவும் பேசப்படவில்லை என்று உறுதிப்படுத்த முடிந்தது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வடக்குக்கு சென்று 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக வாக்குறுதி வழங்குகிறார்கள்.

முழு நாட்டுக்கும் இடையூறாக இருந்த விடுதலைப்புலிகள் அமைப்பை இல்லாதொழித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தைதுரிதமாகஅபிவிருத்தி செய்தார்.

அரசமைப்பின் பிரகாரம், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. தமிழர்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் எமது ஆட்சியில்தான் அபிவிருத்தியடைந்தது.

தேர்தல் கால பிரசாரமாக அரசமைப்பின்13ஆவதுதிருத்தத்தை பயன்படுத்துவதை அரசியல் தரப்பினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். 13ஆவது திருத்தம் பற்றி அனைவரும் பேசுகிறார்கள். ஆனால் காலவரையறையின்றி, பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் பற்றி எவரும் பேசுவதில்லை.

மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் தமிழர்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டுள்ளதுஎன்பதைதமிழ்அரசியல் தலைமைகள் அறியவில்லையா?

மாகாண சபைத் தேர்தலை நடத்தவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளைமுன்னெடுத்தால் கட்சி என்ற ரீதியில் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார்.

வேலூர் தொழில்நுட்ப கல்லூரி துணைவேந்தர்கலாநிதிவிஸ்வகாந்த் தலைமையிலான குழுவினர்

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று சபையில் உறுதியான தீர்வு எட்டப்படாத நிலையில் பதில் புகையிரத பொது முகாமையாளர் உட்பட புகையிரத நிலைய அதிபர் சங்கத்தினர் பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவண்ண உட்பட போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து பதில் அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும்தீர்மானத்தைகைவிட்டனர். இந்த சந்திப்பு தொடர்பில் பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவண்ண குறிப்பிட்டதாவது,

புகையிரத நிலைய அதிபர் சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அமைச்சரவை பத்திரம் கடந்த மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விடயம் குறித்து அரச சேவை ஆணைக்குழுவின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக வகுக்கப்பட்ட செயற்திட்டத்தில் ஒருசில தொழில்நுட்ப கோளாறுகள் காணப்படுவதால் இறுதி தீர்மானம் எடுப்பது தாமதமாகியுள்ளது என அரச சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. அரச சேவை ஆணைக்குழு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை உறுதியான தீர்மானத்தை அறிவிப்பதாக குறிப்பிட்டுள்ளது என்றார்.

புகையிரத நிலைய அதிபர் சங்கத்தி;ன் தலைவர் சுமேத சோமரத்ன குறிப்பிட்டதாவது, முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவுடன்கலந்துரையாடி செவ்வாய்க்கிழமை உறுதியான மற்றும் சாதகமான தீர்மானத்தை அறிவிப்பதாக பதில் போக்குவரத்து அமைச்சர் உறுதியளித்துள்ளார். சாதகமான தீர்வின்றேல் எவ்வித பேச்சுவார்த்தையிலும் ஈடுபடாமல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்றார்.

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகழ்வு இடம்பெற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ள தோடு,பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த காணிக்குள் வருகை தந்த சிலர் காணியில் கனிய மணல் அகழ்வில் ஈடுபட நடவடிக்கை எடுத்த நிலையில் அப்பகுதி மக்கள் ஒன்றுகூடிஎதிர்ப்பைதெரிவித்தனர். குறித்த காணியில் என்ன திட்டம் முன்னெடுக்கப்போகிறார்கள்என்ற விடையம் தமக்குத் தெரியாது என்றும்வெளிப்படையாகஎமக்குத் தெரிவிக்க வேண்டும் எனவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மக்களுடன் கலந்துரையாடினார். பின்னர் அடாத்தாகப் பிடிக்கப்பட்ட காணி பகுதிக்குச் சென்று அங்குப் பொறுப்பாக இருந்தவருடன் கலந்துரையாடியதுடன், மக்கள் எதிர்ப்புதெரிவிக்கின்றமையினால் இவ்விடத்தில் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்க வேண்டாம் என்றும் மக்களுடன் பிரிதொரு தினத்தில் இவ்விடயம் தொடர்பாகக்கலந்துரையாடிமுடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த காணியில் நின்ற உரிய நபர் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காத நிலையில் அங்கிருந்து வெளியேறினர்.

## பெரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் மீது விதிக்க சர்வதேச நாணயநிதியம்அறிவுறுத்தியுள்ளது. மக்கள்தரப்பில்நின்றுசிந்திக்காமல் மக்கள்மீதுவரம்பற்றஅழுத்தத்தை திணிக்கும்சர்வதேசநாணயநிதிய ஒப்பந்தம் எட்டப்பட்டதே இதற்குக் காரணமாகும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்படும்.

சர்வதேச நாணயநிதியத்தின் பங்கேற்பில் நாட்டை கட்டியெழுப் புவதுயதார்த்தமானதும்நடைமுறை யானதுமான விடயம் ஒன்றாக அமைந்தாலும், முதுகெழும்பை நிமிர்த்திக் கொண்டு, மக்களுக்கு நிவாரணம் வழங்கும், மக்களை மையமாகக்கொண்டஒப்பந்தத்தை எட்டுவது அரசின் பொறுப்பாகும். அரசவருமான இலக்குகளை எட்ட முடியாமல் போனமையினாலயே புதிய வரிகள் விதிக்கப்படுகின்றன. மேலதிக வரிகளை விதிக்காமல் வரிஅறவீட்டுத்வேலைத்திட்டத்தை வினைத்திறனாக மேற்கொள்ள வேண்டும்.

நட்புவட்டார பெரும் செல்வந்தர்கள் பலம் வாய்ந்தவர்களின் தொடர்பில் மீளச் செலுத்த வேண்டியுள்ளகோடிக்கணக்கான பெருந்தொகை கடனை தள்ளுபடி செய்துள்ளனர். கடன் தள்ளுபடி செய்யப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் பல கோடி கடன்களை செலுத்தாதவர்களின் பெயர் பட்டியலை அண்மையில் நாடாளுமன்றத்தில் பகிரங்கப் படுத்துமாறு நிதியமைச்சரிடம் கேட்ட போது, கடன் கொடுக்கல் வாங்கல்கள் இரகசியமானவை எனவும், பெயர்களை வெளியிட முடியாது எனவும் தெரிவித்துவிட்டனர்.

உச்ச முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றி, அமுல்படுத்தி, கோடிக்கணக்கில் கடன் வாங்கிய தமது நெருங்கிய நட்புவட்டார செல்வந்தர்களின் கடனை தள்ளுபடி செய்த பெரும் நிறுவனங்களினதும், தனிநபர்களினதும்பெயர்களைவெளியிடாமல், ஒட்டுமொத்தமக்களின்தோள்களில் எல்லையற்ற வரிச்சுமையை அரசு சுமத்தியுள்ளது. இது பெரும் அநீதியாகும்.

மீளச் செலுத்த வேண்டியுள்ள கோடிக்கணக்கான பெருந்தொகை கடனை மீளச் செலுத்தாது சலுகைகளை பெற்றுவரும் பெரும்செல்வந்தர்கள் உரியவாறு தமது கடன் தொகையை மீளச் செலுத்தாவிட்டால், அவர்களுக்கு எதிராக உச்சபட்ச சட்ட நடவடிக்கைகளை எடுப்போம் எனவும், நட்புவட்டார செல்வந்தர்களுக்கு எம்மிடம் பாதுகாப்பு கிடையாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வரிச்சுமை என்பது அரச வருமான பிரச்சினைகளுக்கு தீர்வல்ல, அரசின் இயலாமையே இது காட்டுகிறது. அதிக வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து முறையான வரி வருவாயைப் பெறுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அந்நபர்களும், நிறுவனங்களும் சரியான முறையில் வரிவலையில் உள்வாங்கப்பட வேண்டும். அந்த இயலாமையிலும் திறமையின்மையிலும் வரிச்சுமையை அதிகரிப்பது தீர்வாகாது. இது வெறுக்கத்தக்க செயல் எனவும், உரிய நியாயமும் நீதியும் வழங்கப்பட வேண்டும்.

முதலாளிகளின் அரசியல் அதிகாரத் தொடர்புகளினால் சமூகத்தில் செல்வந்தர்களை உயர்வாக மதிக்கும் யுகமும், சாதாரண மக்களை தாழ்வாக நடத்தும் காலமும் முடிவுக்கு வந்து, அனைவரும் சமமாக நடத்தப்படும் யுகம் உருவாக்கப்படும் என்றார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமத்துவம், நியாயப்பாடு மற்றும் இலங்கை கிரிக்கட்டின் மூலதனமாக காணப்படும் பாடசாலை, மாவட்ட, மாகாண, கழக மட்டத்திலான மறுசீரமைப்புக்கான பரிந்துரைகள் உள்ளடங்கியுள்ளன.

அதன்படி அமைச்சரவை உப குழு அறிக்கையை மையப்படுத்தி, அமைச்சரவையினால் கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்புக்கானசட்டமூலத்தைதயாரிக்க நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர் கே.டீ.சித்ரசிறியின் தலைமையில், சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர, கலாநிதி அரித்த விக்ரமநாயக்க, இலங்கை வணிகச் சபையின் தலைவர் துமிந்த உலங்கமுவ ஆகியோருடன், நீதி அமைச்சின் பரிந்துரைக்கமைவாக சட்டமா அதிபர் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மனோஹர ஜயசிங்க மற்றும் சட்டமூல தயாரிப்பு திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தி உதவி சட்டமூல தயாரிப்பாளர் சமிலா கிருஷாந்தி உள்ளிட்டவர்கள் இந்த நிபுணர்குழுவில்அங்கம்வகித்தனர்.

மேற்படி இந்தக் குழுவின் செயலாளர்/ இணைப்பாளராக ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் லோஷினி பீரிஸ் நியமிக்கப்பட்டார். நிபுணத்துவக்குழுவினால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தைக் கையளிக்கும் நிகழ்வில், தேசிய பாதுகாப்புதொடர்பானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் (அமைச்சரவை அலுவல்கள்) சமித் தலகிரியாவ உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
**076 3983858**
**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# வரிசைகள் இல்லை என்பதால் நாடு ஸ்திரமாகிவிட்டது என்பது பொய்

## இன்றுள்ள ஒரே தீர்வு சஜித் மட்டுமே என்கிறார் வினோகாந்த்

(வி.ரி.சகாதேவராஜா)

நாட்டில் பெற்றோல் நிலையங்களில் வரிசை இல்லை. சிலிண்டருக்கு வரிசை இல்லை என்பதை மாத்திரம் வைத்துக்கொண்டு நாடு ஸ்திரமான நிலையை அடைந்துள்ளது என்று சொல்ல முடியாது . நிரந்தர தீர்வுக்கு ஒரே வழி சஜித் பிரேமதாஸ மட்டுமே.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட பொத்துவில் தேர்தல் தொகுதியின் இணை அமைப்பாளரும் கல்வி ஊழியர் சங்கத்தின் இணைச்செயலாளரும் இளைஞர் சக்தியின் மாவட்ட செயலாளருமான வெள்ளையன் வினோகாந்த் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் மாலை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இக் கருத்தினை தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

அன்று அரகலய சந்தர்ப்பத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதமர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று சஜித் பிரேமதாசவை கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர் அதனை ஏற்கவில்லை.அச் சந்தர்ப்பத்தில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்திருந்தன. தற்போது அந்த சந்தர்ப்பத்தை இந்த தேர்தலில் காட்டுங்கள் .

நாட்டு மக்கள் அவருக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்கான ஆணையை வழங்கியிருந்தார்கள். தற்போதைய சமகாலத்தில் புதிய அரசியல் சூழல் ஒன்று உருவாக்கியுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான சந்தர்ப்பம் ஒன்று உருவாகி உள்ளது. எனவே அரகலைய சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பதவியை ஏற்குமாறு கூறியவர்கள் மற்றும் இந்த நாட்டு மக்களையும் பார்த்து கேட்கிறோம் ,நீங்கள் ஆசைப்பட்டதைப் போல உங்கள் வாக்குகளை இந்த தேர்தலில் சஜித் பிரேமதாஸவிற்கு வழங்கி வையுங்கள் .

இன்று வானத்தைத் தொடும் அளவிற்கு விலைவாசிகள் உயர்ந்து விட்டன. மூன்று வேளை உண்ட சாதாரண மக்கள் இன்று இரண்டு வேளை உண்ணும் அளவிற்கு சென்று விட்டார்கள். இலங்கையினுடைய வாழ்வாதாரத்தை உலக அமைப்புகள் திட்டவட்டமாக 75 லட்சம் சதவீதமான ஆதாரத்திற்கு அங்கலாய்த்து கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் அனைத்து மாவட்டங்கள் தோறும் சென்று வைத்தியசாலைகளாக இருந்தாலும் பாடசாலைகளாக இருந்தாலும் பார்த்து பார்த்து தனது சேவைகளை செய்து கொண்டிருக்கின்றார். இன்று வங்கியில் பல கோடி ஷரூபா வைத்துக் கொண்டு மக்களுக்கு எதுவும் செய்யாமல் சஜித் பிரேமதாஸவை விமர்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவை ஏட்டுச் சுரக்காய்க்கு உகந்ததாகவே கொள்ளப்படுகின்றது . நாட்டில் தோன்றியுள்ள இந்த பெரிய பாதாளத்தை நாங்கள் மூட வேண்டுமானால் நல்லதொரு தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும் அப்போதுதான் பசித்த வயிற்றிற்கான ஆகாரம் உங்களை தேடி வரும் எனவே எதிர்காலத்தில் எங்கள் பிள்ளைகளின் வாழ்வாதாரம் கல்வி, இலங்கை என்பதோ அல்லது உலகம் என்பதோ எங்களுக்கானது மாத்திரமல்ல எதிர்கால சந்ததிக்கு உரியது. எனவே தற்போது இந்த அரசியல்வாதிகளின் அசமந்த போக்கினால் வங்குரோத்தை நோக்கி சென்றுவிட்டது .

இந்த வங்குரோத்தில் இருந்து விடுபட ரனில் விக்ரமசிங்கவினால் மாத்திரம் முடியாது. நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் அவர் பெரிய வேலை செய்து கொண்டிருக்கின்றார் என்று. கடன் சுமைகள் கடனுக்கு மேல் கடன் சென்று கொண்டிருக்கின்றதே தவிர இந்த கடனை செலுத்துவதற்கான, மீண்டு வருவதற்கான எந்த திட்டமும் அவரிடம் இல்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியிடம் அதற்கான திட்டங்கள் உண்டு.

சமகாலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து நல்லாட்சி அமைக்க பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் வந்து இணைந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் வித்தியாசமான கட்சிகள் மற்றும் கிராம மட்டத்தில் இருக்கும் தலைவர்கள் கூட இணைந்து கொண்டிருக்கின்றார்கள்.

எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஏனைய கட்சி மற்றும் மொட்டு கட்சி உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு இந்த ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவரை ஜனாதிபதியாக்குவதற்கான முயற்சிகள் ஈடுபட உள்ளதாக அவர்கள் கூறியிருந்தார்கள். எனவே சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக வருவதை யாராலும் தடுக்க முடியாது. என்பதற்கு இது ஒரு உதாரணம். இலங்கையில் உள்ள அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தி அங்கத்துவம் பெற்று கொள்வதற்கான வாசல் திறந்து இருக்கின்றது .

ஜாதி மத பேதங்களைக் கடந்து நல்லாட்சியை வழங்க கூடிய தலைவரான சஜித் பிரேமதாச வடக்கு, கிழக்கு ,கொழும்பு ,மத்திய பிரதேசம், தமிழ் ,முஸ்லிம் ,சிங்களம் என பேதமில்லாமல் அவருடைய செயற்பாடுகள் மற்றும் நலத்திட்டங்கள் அனைவரையும் சென்றடைந்து கொண்டிருக்கின்றது .சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி ஆசனத்தில் அமர வைக்கக்கூடிய அனைவருக்கும் மன வாசல் திறந்து இருக்கின்றது. எதிர்காலம் எங்களுடைய பிள்ளைகளுக்கானது எனவே சஜித் பிரேமதாசவால் நல்லதொரு எதிர்காலம் உங்களுக்கு அமையும் என்று தெரிவித்தார். (05)

# கற்பிட்டி திகழி அல் மதீனா பாடசாலைக்கு 15 மில்லியன் நிதி பெற்றுகொடுத்த தாஹிர்





(எம் சியாஜ் )

கற்பிட்டி திகழி அல் மதீனா பாடசாலைக்கு முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் என்.டி எம் தாஹிர் பதவியில் இருந்த காலப் பகுதியில் வடமேல் மாகாண சபை ஊடாக பெற்றுக் கொடுத்த இரு மாடிக் கட்டடத்தின் கீழ் பகுதி கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கடந்த 2017 ஆம் ஆண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்டது. எனினும் மேல் தள கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டால் கிடப்பில் போடப்பட்டிருந்தன.

தற்போது மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டுக்குரிய வகுப்பறைகள் குறைபாடாகக் காணப்பட்டதால் கட்டடத்தின் மேல்மாடிக்கான தேவைப் பாட்டை கருத்தில் கொண்டு முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் தாஹிர் மேற்கொண்ட தொடர் முயற்சியின் பயனாக தற்போது வடமேல் மாகாண சபையில் இருந்து சுமார் 15 மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை கற்பிட்டி திகழி அல் மதீனா பாடசாலைக்கு அதிகாரிகள் சகிதம் விஜயம் செய்த முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் என்.டி.எம் தாஹிர் கட்டடத்தைப் பார்வை இட்டதோடு துரிதமாக வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் சிபான், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஊர் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)





# மூடப்பட்டிருந்த உப தபாலகத்துக்கு உயிரூட்டிய அலி சப்ரி ரஹீம் எம்.பி

## மாதம்பையில் மக்கள் மகிழ்ச்சி

(எம் சியாஜ்)

மாதம்பை பழைய நகரத்தில் உள்ள உப தபாலகம் கடந்த ஒன்றரை வருட காலமாக மூடப் பட்டிருந்ததால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர். இது விடயமாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

நாாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து குறித்த தபால் நிலையம் மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 12 ஆம் திகதி குறித்த உப தபாலகம் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பிரத்தியேக செயலாளர் ஜமால்தீன் ஜவ்ஸி, புத்தளம் மாவட்ட தபால் கண்கானிப்பாளர் எச்.எம்.ஏ.ஜே பண்டார, ஓய்வூதிய சங்கத்தின் தலைவர் எம். நதுன் பெரேரா, மாதம்பை ஜ/ம்ஆப் பள்ளிவால் பரிபாலன சபைத் தலைவர் எம். எப்.எம். அரபாத் மற்றும் ரிஸ்வான் உட்பட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், முன்னாள் சிலாபம் பிரதேச சபை உறுப்பினர் எம்.டி.எம். தஸ்லீம், ஹிஸாம், ஜிப்னாஸ், அஸ்லம் மற்றும் மாதம்பை பிரதேசவாசிகள் என பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எங்கப்பன் குதிருக்குள் இல்லை

தேசிய பாதுகாப்புப் பற்றிய நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது அதில் ஆராயப்பட்ட விடயங்கள் தமிழர் தரப்பின் அக்கறைக்குரியவையாக இருக்கின்றன. அந்தக் கூட்டத்தில் போர்க் குற்றச்சாட்டுக்கான ஆதாரங்கள் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அதனைக் கொண்டு பல நாடுகளிலும் இலங்கைப் படைகளின் அதிகாரிகள் மீதும் அரசியல்வாதிகள் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுவின் தலைவருமான சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் இலங்கை எடுக்கவேண்டிய பதில் நடவடிக்கைகள் குறித்தே அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கின்றன. இலங்கையில் போர்க் குற்றச்சாட்டுக்களே இடம்பெறவில்லை என்று கூறிவரும் படைத்துறை அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் ஜெனிவாவில் சேகரிக்கப்படும் ஆதாரங்களைக் கண்டு அஞ்சுவதும், அவற்றை ஆதாரமாகக் கொண்டு தம்மீது பல நாடுகளிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என்று பதற்றப்படுவதும், மடியில் கனம் இல்லாதவனுக்கு வழியில் பயமிருக்கத் தேவையில்லை என்பதை உணர்த்தி நிற்கின்றன.

சரத் வீரசேகரவும் போர்க் காலத்தில் கடற்படை உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர்தான். எனவே அவருக்கு இதுவிடயத்தில் அதிகளவில் அக்கறையும் கவலையும் பதற்றமும் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகக் கணிசமானளவு சாட்சிகள் ஜெனிவாவில் அமைக்கப்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இந்தச் சிறப்பு அலுவலகத்திடம் இருப்பதாக குறித்தபொறிமுறையின்ஊடாகஅண்மையில்வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதையும் சரத்வீரசேகர இந்தக் கூட்டத்தில் தெளிவுபடுத்தியிருந்தார்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் இடம்பெறவேயில்லை, அவை போலியான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் என்று கூறிவந்த இலங்கைத் தரப்பினர், இப்போது ஜெனிவாவில் ஆதாரங்கள் திரட்டப்பட்டிருப்பதாகக் கூறும் அறிக்கையைப் பார்த்து அச்சப்படவேண்டியதில்லை. ஆனாலும் அவர்கள் அச்சப்படுகிறார்கள், அதற்கு எதிராகப் பதில் நடவடிக்கையை அயலுறவுத்துறை அமைச்சு எடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

இவ்வாறு போர்க் குற்றம் இழைத்ததாக சாட்சி கிடைத்திருக்கும் இலங்கைப் படையினருக்கு எதிராக நீதிமன்ற சட்ட அதிகாரத்தின் கீழ் சர்வதேச நீதிமன்றத்தில் வழங்குத் தொடர்வதற்கு ஏற்கனவே சில நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40/1 தீர்மானத்தின்படிதான் ஜெனிவாவில் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்கள் திரட்டப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றன. ஆனால், இந்தஆதாரங்களைக் கொண்டு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு மனித உரிமைகள் பேரவை எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. இன்னும் பல ஆண்டுகள் கழித்து அல்லது தசாப்தங்கள் கழித்து நடவடிக்கை எடுக்கப்பட்டால் அப்போது பயன்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த ஆவணமயமாக்கல் நடக்கின்றது.

அப்படி வழக்குகளை இலங்கைப் படையினர் எதிர்கொள்ளும் பன்னாட்டு நிலை ஒன்று உடனடியாக வருவதற்கான வாய்ப்புக்கள் தற்போதைய உலக அரசியல் நிலவரத்தில் மிகமிகக் குறைவானதே. அப்படியிருந்தும் சரத் வீரசேகர போன்றவர்கள் பதற்றப்படுவதும் அதற்கெதிராக அயலுறவுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்துவதும் படையினருக்கு எதிராக நாடுகளில் வழக்குகள் பாயப்போகின்றன என்று அச்சப்படுவதும் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதைப் போலத்தான் இருக்கின்றது.

# அதிக நேரம் நின்றால் பாதிப்பு! ஏன்?

கு.கணேசன்



ஏராளமான அழைப்புகள்! 'அமர்ந்தே இருந்தால் ஆபத்து' கட்டுரையை வாசித்துவிட்டு, அமர்ந்தே இருப்பதில் இவ்வளவு ஆபத்துகள் இருக்கின்றனவா என்று பல வாசகர்களும் அழைத்திருந்தார்கள். அமர்ந்தே இருந்தால் மட்டும் அல்ல நீண்ட நேரம் நின்றுகொண்டிருந்தாலும் நம் உடலுக்குப் பாதிப்பு ஏற்படுவது உண்டு. அதற்கு நல்ல உதாரணம்: வினோத்.

வினோத் ஒரு பேரங்காடியில் விற்பனை ஊழியராக இருக்கிறார். எட்டு மணி நேரம் தொடர்ந்து நின்றுகொண்டே செய்கிற வேலை. நடுத்தர வயது. கடந்த 4 வருடங்களாகப் பகலில் கால் வலி கொல்கிறது. வேலை முடிந்து



வீட்டுக்குச் செல்லும் போது பாதங்கள் இரண்டும் வீங்கிக்கொள்கின்றன. படுத்து ஓய்வெடுத்தால் கால் வலி குறைகிறது. பாத வீக்கமும் மறைந்துவிடுகிறது.

சென்ற வாரம் கால் வலி கடுமையாகிவிட்டது. பணிக்குச் செல்ல முடியவில்லை. மருத்துவரிடம் செல்கிறார் வினோத். அவருக்கு 'வேரிகோஸ் வெய்ன்' (Varicose vein) எனும் நோய் வந்திருக்கிறது என்கிறார்கள், மருத்துவ மொழியில்.

தொடக்கத்திலேயே மருத்துவரிடம் வந்திருந்தால், இதைக் கட்டுப்படுத்தியிருக்கலாம் இப்போதுள்ள நிலைமையில் ஆபரேஷன்தான் தீர்வு என்கிறார்கள். அதற்குப் பண வசதி இல்லாத வினோத் பதறிப் போகிறார்.



### என்ன காரணம்?

உடலியங்கியல் முறைப்படி, இதயத்தில் புறப்படும் குருதி பாதம் வரை சென்றுவிட்டு மீண்டும் இதயத்துக்குத் திரும்ப வேண்டுமல்லவா? இதற்கெனப் பிறந்த பாதைதான் கால்களில் உள்ள சிரை குருதிக்குழாய்கள் (Veins). இவற்றில் வெளிப்புறச் சிரைகள், உட்புறச் சிரைகள் என இரு வகை உண்டு. வெளிப்புறச் சிரைகளில் உள்ள குரிதி, உட்புறச் சிரைகள் வழியாக பெருஞ்சிரைக்குச் (Vena cava) சென்று, இதயத்தை அடைய வேண்டும்.

இந்தப் பயணத்துக்குச் சிரைக்குழாய்களில் உள்ள வால்வுகள் உதவுகின்றன. இந்த வால்வுகளின் தனித்தன்மை என்னவென்றால், இவை குருதியை உடலுக்குள் மேல் நோக்கியே செலுத்தக்கூடியவை் புவியீர்ப்பு விசை காரணமாக குருதி கீழ் நோக்கி வருவதைத் தடுக்கும் 'பேரிகார்டுகள்'.

சிலருக்குப் பிறவியிலேயே இந்த வால்வுகள் சரியாக அமைவதில்லை அல்லது சில நோய்களின்போது சரியாகப் பணிசெய்வதில்லை. இதன் விளைவாக, கால்களில் பாயும் குருதி புவியீர்ப்பு விசையை எதிர்த்து மேல்நோக்கிச் செல்ல முடியாமல், காலிலேயே தங்கிவிடுகிறது. இதனால் அந்தச் சிரைக்குழாய்கள் வீங்குகின்றன. இந்த நோய்க்கு 'வேரிக்கோஸ் வெயின்' என்று பெயர். தமிழில், 'விரிசுருள் சிரை நோய்'.

### யாருக்கு வருகிறது?

பரம்பரை காரணமாக, பிறவியிலேயே சிரைக்குழாய்களில் வால்வுகள் இல்லை என்றால், சிறு வயதிலேயே 'வேரிக்கோஸ் வெயின்' வந்துவிடும். 40 வயதுக்கு மேல் சிலருக்கு இந்த வால்வுகள் பலவீனமாகும். உடற் பருமன் உள்ளவர்களுக்கும், வயிற்றில் கட்டி இருப்பவர்களுக்கும் வயிற்றில் அழுத்தம் அதிகரிக்கும். அதனால், காலிலிருந்து வயிற்றுக்கு வரும் சிரைக்குழாய்கள் வீங்கிக்கொள்ளும். கடுமையான மலச்சிக்கல் அடிக்கடி ஏற்பட்டாலும் இந்த நோய் வருவது தூண்டப்படும்.

ஹோட்டல்களில் ஃ கடைகளில் ஃ மால்களில் வேலை செய்பவர்கள், காவலர்கள், காவல் துறையினர், கண்டக்டர்கள், ஆசிரியர்கள் என நீண்ட நேரம் நின்று பணி செய்கிறவர்களுக்கும், நெட்டையாக இருப்பவர்களுக்கும், உடலுழைப்பு குறைந்தவர்களுக்கும் இந்த நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

ஆண்களைவிடப் பெண்களுக்கு இது அதிகம் வருகிறது. பெண்களின் ஈஸ்ட்ரோஜன் மிகுந்த 'ஹார்மோன் கெமிஸ்ட்ரி' அதற்கு ஒரு காரணம். அடுத்து, ஹைஹீல்ஸ் செருப்பு அணிபவர்களுக்கும், கால்களில் இறுக்கமான ஆடைகளை அணிபவர்களுக்கும் இளம் வயதிலேயே இது வந்துவிடுகிறது. சில பெண்களுக்குக் கர்ப்பக் காலத்தில் மட்டும் இந்த நோய் ஏற்படுவதுண்டு. கருத்தடை மாத்திரைகளைத் தொடர்ந்து சாப்பிடும் பெண்களுக்கும் இது வரலாம்.

### அறிகுறிகள் என்ன?

காலில் தோலுக்கு அடியில் மேற்புறமாக இருக்கும் வெளிப்புறச் சிரைகள் அகன்று விரிந்து வீங்கிக் காணப்படும் சிறு பாம்புபோல் சுருண்டிருக்கும் சிலந்திபோல் பரவியிருக்கும் ஊதா அல்லது பச்சை நிறத்தில் காணப்படும். நீண்ட நேரம் நின்றால் கால் வலிக்கும். இதைத் தொடர்ந்து காலில் ஃ பாதத்தில் வீக்கம் தோன்றும். இரவு நேரத்தில் வலி குறைந்த மாதிரி இருக்கும். ஆனால், காலில் எரிச்சல் உண்டாகும். தசைகள் இழுத்துக்கொள்ளும்.

இதற்கு அடுத்த கட்டமாக, காலில் உள்ள தோல் கறுப்பு நிறத்துக்கு மாறிவிடும். அங்கு அரிப்பு ஏற்பட்டு அழற்சி உண்டாகும். அதில் லேசாக அடிபட்டால்கூட குருதி பீய்ச்சியடிக்கும். சொறிந்து புண் உண்டாகிவிட்டால், விரைவில் ஆறாது வருடக்கணக்கில் நீடிக்கும்.

'வேரிக்கோஸ் வெயின்' பெரும்பாலும் ஆபத்தில்லாத நோய்தான். என்றாலும், இதனால் அரிதாகச் சிலருக்கு குருதி உறைவு ஏற்படவும் வாய்ப்புள்ளது. இது நுரையீரல் அடைப் புக்கு (Pulmonary embolism) அழைத்துச் செல்லும்.

கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையிலலைதான். ஆனாலும், 'டுப்ளெக்ஸ் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை' (Duplex ultra sound imaging) செய்தால், நோயின் நிலைமையைத் துல்லியமாகத் தெரிந்துகொள்ள முடியும்.

(9ஆம் பக்கம் பார்க்க...)





# காரைதீவில் வெல்த் கோப் புதிய வங்கி கிளை திறப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

வெல்த் கோப் வங்கியின் 49 ஆவது கிளை காரைதீவில் வியாழக்கிழமை கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

வங்கியின் முகாமையாளர் செல்வி டெலினா பீட்டர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து கொண்டார் .

வங்கியின் தலைவர் தேசமான்ய கீர்த்தி மகோத்தி முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க வங்கியின் பிராந்திய முகாமையாளர் தானியாவும் கலந்து கொண்டார்.

21 வருட சேவையை கொண்ட இந்த வங்கி அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, உஹன, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் இயங்கி வந்தது. தற்போது காரைதீவில் ஆரம்பித்து வைக்கப்பட்டு இருக்கின்றது.

காரைதீவின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். கூட்டுறவு வங்கி என்ற காரணத்தால் இங்கு எவ்விதமான வரியும் அறவிடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# பொத்துவில் கல்விக் கோட்டத்தில் ஆய்ந்தறியும் அறிமுகம் நிகழ்வுகள்



(எம். எப். றிபாஸ்)

பொத்துவில் கோட்டப்பிரிவில் 2024 இல் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பாக ஆய்ந்தறியும் நிகழ்வு அல் பஹ்றியா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உதவிக்கல்விப் பணிப்பாளர் நஜீப், பொத்துவில் ஆரம்ப பிரிவு பாடசாலை அதிபர்கள்,கோட்டக்கல்வி அதிகாரி, ஆசிரிய ஆலோசகர்கள்,ஆசிரிய ஆசிரியைகள் என பலரும் கலந்து கொண்டனர்.

பொத்துவில் ஒஸ்மானியா வித்தியாலய அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க கல்விவலய ஆரம்பக் கல்வி இணைப்பாளரும்,பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளருமான ஏ.எம்.எம்.தாஜ/தீன் தனது சொந்த நிதி மூலம் மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஒரு தொகுதி புகைப்பட நகல் காகிதங்களையும் வழங்கி வைத்தார .(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்


தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir



# இந்தியாவிலிருந்து மன்னார் வரை கடலை நீந்தி கடக்கச் செல்லும் சிறுவனை வாழ்த்திய ரிஷாத்

(எம்.எப்.றிபாஸ்)

இந்தியாவின் (இராமேஸ்வரம்) தனுஷ்கே-ாடியில் இருந்து தலைமன்னார் வரையிலான, 32 கிலோ மீற்றர் நீளமான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து, உலக சாதனை படைக்கவுள்ள சி-றுவன் ஹஸன் ஸலாமாவுக்கு, மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, ஜமாலியாவில் உள்ள சிறுவன் ஸலாமாவின் இல்லத்துக்கு நேரில் விஜயம் செய்த ரிஷாத், சிறுவனை வாழ்த்தியதோடு, பரிசுத்தொகை ஒன்றையும் வழங்கி வைத்தார்.

இதன்போது, மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ஷூப் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான டாக்டர் ஹில்மி மொஹிடீன், தௌபீக் ஆகியோரும் சென்றியி-ருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஆதியம்மன் கேணி பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(காரைதீவு சகா)

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் திருகோணமலை மூதூர் கல்வி வலயத்தில் உள்ள ஆதியம்மன் கேணி வித்தியாலய பாடசாலை மாணவர்களில் 50 வறிய மாணவர்களுக்கு கற்றல் உப-கரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர். மா. வர்ண குலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

'எழ்மையை ஒழிப்போம் கல்வ-ியை விதைப்போம்' எனும் தொன-ிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பல கஸ்ர பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக இணைந்த கரங்கள் அமைப்பானது உதவியினை வழங்க-ியிருந்தது.

மேலும் இப் பாடசாலையானது 138 ஆவது பாடசாலையாகவும் இலங்கையில் இனமதம் மொழி பாராமல் பாடசாலை மாவர்களுக்கு கற்றல் உபகரணம் மற்றும் மேலதிக கல்வி செயற்பாட்டிற்காண உதவியி-னை வழங்கி வருகின்றது.

மேலும் இந் நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்க-ளான,சி.காந்தன், லோ. கஜரூபன், எஸ். சுரேஸ், மா.ஜெகனாதன் ஆகியோர் கலந்து கொண்டு 50 மாணவர்களு-க்கான பாடசாலைக்கு செல்வதற்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்-தகப்பை என்பன வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாடு மறுசீரமைக்கப்படும் என்று கூறுகின்றன. அதற்கான சந்தர்ப்பங்களும் உள்ளன.

எம்மைப் பொறுத்தவரையில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப்பெறுமாறுஅனைவரும் கூறியபோதே ஆளும் தரப்பு செய்திருந்தால் தற்போதைய நிலைமைகள் ஏற்பட்டு இருக்காது. எனினும், தற்போதைய நிலையில் சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளால் தான் நாடு சரியானபாதைநோக்கிச்செல்வதற்கு அடியெடுத்துவைத்துள்ளது. ஆகவே நாட்டின்எதிர்காலத்தில்செல்வாக்குச் செலுத்தவல்ல அத்தீர்மானத்தினை தொடர்வது முக்கியமானதாகும் என்றார்.

## இ.தொ.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கங்கள் குறித்த பரந்த அறிவைக் கொண்ட ஒருவராவார். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் பன்மொழிப் பேச்சாளரான இவர், ஓர் எழுத்தாளரும் ஆவார்.

1991 இல் கண்டி மாநகர சபைக்கு அதிகூடிய வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட இவர், 1994 ஆம் ஆண்டும் 1997 ஆம் ஆண்டு மத்திய மாகாண சபை உறுப்பினராகவும், 2001 இல் உப தவிசாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், 2002 ஆம் ஆண்டு மத்திய மாகாணசபையின்தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

2004 ஆம் ஆண்டு பாராளு மன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில்போட்டியிட்டு40,000 வாக்குகளைப்பெற்றுபாராளுமன்ற ஆசனத்தைஇழந்தாலும்,மீண்டும் 2004 இல் மத்திய மாகாண சபையின் அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அத்துடன், 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை மத்தியமாகாணசபைக்குமீண்டும் தெரிவுசெய்யப்பட்டு அதன் தவிசாளராகவும்பதவி வகித்தார். மேலும், 3 பாராளுமன்றத் தேர்தல்களில் தேசியப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சர்வதேசவிவகாரங் களுக்கான பிரதானி, தொழிலாளர் கல்விப் பொறுப்பாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் யாப்புத் திருத்தக் குழுவின் உறுப்பினர், மாகாண எல்லை நிர்ணயக் குழுவின் உறுப்பினர் எனப் பல பதவிகளை வகித்து, அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியாகவும் விளங்குகின்ர்-.

## நெல்லக்குள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் கிராமத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

இங்கு வருகை தந்த சிரேஷ்ட சட்டத்தரணிதங்கமுத்துஜயசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்,

சேனையூர் நெல்லிக்குள மலையைச் சுற்றி காணிகள் இருக்கின்றன. இங்கு கல் உடைப்பதற்கு எந்த வகையில் அனுமதி வழங்கப்பட்டது என்று எமக்கு தெரியாது.

நீதிமன்றத்தில் இந்த விடயம் இருப்பதால்எமக்குகருத்துசொல்ல முடியாதுள்ளது.இதனால்இக்கிராம மக்கள் கஷ்டப்படுகிறார்கள் துன்பப்படுகிறார்கள் என்று மாத்திரம் எமக்கு தெரிகின்றது என்றார்.

தற்போது இந்த இடத்தினை நீதிபதிஅவர்கள்வந்துபார்வையிட்டு சென்றதினால் 20 ஆம் திகதி எமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம் என்றும் குறிப்பிட்டார்.




# ரத்மல்யாய மையவாடி பாதை பிரதேச மக்களால் புனரமைப்பு





(எம் சியாஜ்)

புத்தளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ரத்மல்யாய கிராமத்தின் முஸ்லிம் மையவாடி பாதை பிரதேச இளைஞர் குழுக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடன் வெள்ளிக்கிழமை புனரமைக்கப்பட்டு கொங்றீட் இடப்பட்டது.

இம்முறை புத்தளத்தில் ஏற்பட்ட கடும் மழை வெள்ளத்தால் ரத்மல்யாய மையவாடி பாதை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத வண்ணம் காணப்பட்டது.

இது விடயமாக கவனத்தில் எடுத்த பிரதேச மக்கள் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடன் , இளைஞர் குழுக்கள், சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து மேற்படி பாதையில் காணப்பட்ட பள்ளங்களை முழுமையாக நிரப்பி நீர் வழிந்தோடும் வண்ணம் போக்கு வைக்கப்பட்டு பாதைக்கு கொங்றீட் இட்டு செப்பனிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புத்தளம் பிரதேச செயலகத்திற்குப்பட்ட ரத்மல்யாய கிராமத்தின் முஸ்லிம் மையவாடி பாதை கடந்த வெள்ள அனர்த்தம் காரணமாக போக்குகள் உடைந்து பாதை வழியே பயணிகள் செல்வதற்கு சிரமம் காணப்பட்டது.

பிரதேச இளைஞர் குழுக்கள், சமூக ஆர்வலர்கள், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடன் வெள்ளிக்கிழமை பாதையின் பள்ளங்கள் நிரப்பப்பட்டு, கொங்றீட் போடப்பட்டு மக்களின் பாவனைக்கு ஏற்பாடாக அப்பாதை வேலை முடிக்கப்பட்டது. (05)

# அதிக நேரம் நின்றால் பாதிப்பு! ஏன்?

(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

**என்ன சிகிச்சை?**

காலில் தீராத வலி, ஆறாத புண், ரத்தக்குழாயில் குருதி உறைந்துவிடும் நிலைமை ஆகியவை காணப்பட்டால், அறுவை சிகிச்சைதான் சிறந்தது. இந்த நோய்க்கு ஐந்து வகை சிகிச்சை முறைகள் உள்ளன.

வீங்கியுள்ள குருதிக் குழாயை முடிச்சுப் போட்டு, சிறு சிறு பகுதிகளாக வெட்டி எடுப்பது ஒரு வழி (Vein ligation and stripping).

நவீன முறையில் லேசர் சிகிச்சையில் இதைச் சரிப்படுத்துகின்றனர் (Endovenous laser ablation).

சிலருக்கு சிரை ரத்தக்குழாய்க்குள் மருந்து செலுத்திச் சரிசெய்வதும் உண்டு (Sclerotherapy).

குருதிக்குழாய் பெரிதாக வீங்கியிருந்தால், வளைகுழாயை (Catheter) குருதிக் குழாய்க்குள் செலுத்தி, ரேடியோ அலைவரிசையால் சூடுபடுத்தி வீக்கத்தைக் குறைக்கும் சிகிச்சையும் இருக்கிறது (Radiofrequency ablation).

குருதிக்குழாய் சிறிதாக வீங்கியிருந்தால் தோலில் சிறிய துளைகளைப் போட்டு வீக்கமுள்ள குருதிக்குழாய்ப் பகுதிகளைத் துண்டுகளாக்கி அகற்றுவது இன்னொரு வழி (Ambulatory phlebectomy).

யாருக்கு எந்த வகை சிகிச்சையை மேற்கொள்வது என்பதை குருதிநாள அறுவை சிகிச்சையாளர்தான் (Vascular Surgeon) முடிவுசெய்வார்.

இது முக்கியம்: எந்த சிகிச்சையை மேற்கொண்டாலும், மறுபடியும் நீண்ட நேரம் நிற்பதாக இருந்தால், பிரச்சினைகள் மீள அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே, இந்த நோய்க்கு ஆரம்பத்திலிருந்தே தடுப்புமுறைகளைப் பின்பற்றுவதுதான் புத்திசாலித்தனம்.

**தவிர்ப்பது எப்படி?**

நீண்ட நேரம் நிற்பதைத் தவிர்க்க வேண்டும். நடுநடுவில் நாற்காலியில் அமர்ந்து கால்களை இடுப்புக்கு மேலை உயர்த்திக்கொள்ள வேண்டும். கடைக்காரர்கள் இதற்கு வழிசெய்ய வேண்டும்.

தொடர்ந்து நிற்க வேண்டிய அவசியம் இருந்தால், அரை மணி நேரத்துக்கு ஒருமுறை சிறிது தூரம் நடக்கலாம்.

நின்று வேலை செய்யும்போது 'ஸ்டாக்கிங்ஸ்' (Stockings) எனும் மீள்காலுறையைக் கால்களில் அணிந்துகொள்ள வேண்டும் அல்லது பாதம் தொடங்கி முழங்கால் வரை 'கிரீப் பேண்டேஜ் (ஊசுநிந டியனெயபந) எனும் மீள்துணியைச் சுற்றிக்கொள்ள வேண்டும். இரவில் இவற்றைக் கழற்றிவிடலாம்.

படுத்து உறங்கும்போது கால்களுக்குத் தலையணை வைத்துக்கொள்ள வேண்டும்.

கால், தொடைகளில் மிக இறுக்கமான உடைகள் அணிவதையும், ஹைஹீல்ஸ் செருப்பு அணிவதையும் தவிர்க்க வேண்டும்.

உடல் எடையைப் பேண வேண்டும்.

புகைப்பிடிக்கக் கூடாது.

தினமும் நடைப்பயிற்சி உள்ளிட்ட உடற்பயிற்சிகள் செய்வது நல்லது.



காலைக்கதிர்
Kalaikkathir

# புலம்பெயர் மண்ணில் தமிழ் செழித்திட தாய் மொழி உரையாடலே அவசியம்

## சிட்னி நூல் வெளியீட்டில் மாத்தளை சோமு வலியுறுத்து







ஏதிர்காலத்தில் தமிழ் சமுதாயம் எத்தகைய வழியில் புலம்பெயர் நாடுகளில் மொழிப்பற்றுடன் வாழ வேண்டும் என்பதற்கு இன்றைய தமிழ் ஆர்வலர்களும், அறிஞர்களும், எழுத்தாளர்களும் வழிகாட்ட வேண்டும். இதன் மூலமே எதிர்கால சந்ததி செழிப்பாக தாய் மொழிப்பற்றுடன் வாழ முடியும் என எழுத்தாளர் மாத்தளை சோமு தெரிவித்தார்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்க-்னேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் கடந்த வெள்ளி ஜூன் 7 ஆம் திகதி நடைபெற்றது.

சிட்னியில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு மேலும் கூறுகையில், புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழியை பேணிக்காத்திட வீடுகளில் குழந்தைகளுடன் தாய் மொழியில் உரையாட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்து உரையாற்றினார்.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு ஆற்றினார். அதன்பின் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை தனபாலசிங்கம் நிகழ்த்தினார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர் ஹாஷுன் காசிம் ஆற்றினார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் சுந்தரதாஸ் அவர்கள் ஆற்றினார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்தினார்.அத்துடன் திருநந்தகுமாரும் , பாடும் மீன் சிறிஷ்கந்த ராஜாவும் சிறப்புரை ஆற்றினர்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெற்ற நூல் வெளியீடும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார். (05)

## காத்தான்குடி துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பெண் சந்தேகநபர் குறித்து மேலதிக விசாரணை



(பாறுக் ஷிஹான்)

பெண் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வீடொன்றில் மகனுடன் வசித்து வந்த பெண் ஒருவர் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளதுடன் குறித்த துப்பாக்கிதாரி தப்பிச்சென்ற நிலையில் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தானகுடி மீன்பிடி இலாஹா வீதி அஹமட் லேனில் வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்றுள்ளது.

இதன் போது குறித்த துப்பாக்கி சூட்டில் வீட்டில் வசித்த இளம் பெண் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த பெண்ணின் வீட்டுக்கு துப்பாக்கியுடன் வந்த நபர் பெண்ணை துப்பாக்கியால் தாக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றிருந்தார்.

இந்தச் சம்பவத்தில் சித்தீக் சிபானியா (வயது - 32) என்பவரே காயமடைந்துள்ளதுடன் இப்பெண்ணின் கணவர் ஆஸ்திரேலியா நாட்டில் தற்போது இருப்பதாகவும் இவர் ஒரு மௌலவிஎனவும், குறித்த பெண்ணுக்கு ஒரு மகன் இருப்பதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் காத்தான்குடி பொலிஸார் குறித்த பகுதியிலுள்ள சி.சி.ரி.வி கமராக்களையும் சோதனை செய்து சந்தேக நபர் அடையாளம் கண்டு சந்தேக நபரை மாலை ஆரையம்பதி செல்வா நகர் கிழக்கிலுள்ள வீடொன்றில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் காயமடைந்த பெண்ணின் வீட்டில் தடவியல் பொலீஸ் பிரிவினர் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் பெண்ணின் வீட்டிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்த பெண் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (05)

## 'வெல்வோம் சிறீ லங்கா" எனும் வேலைத்திட்டத்தில் கற்பிட்டி முஸ்லிம் பாடசாலைக்கு ஸ்மார்ட் போர்ட்




(எம் சியாஜ்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் கீழ் 'நானே ஆரம்பம் வெல்வோம் சிறீ லங்கா ஸ்மார்ட் சூரன்களோடு' எனும் வேலைத்திட்டம் மாவட்டம் தோறும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி புத்தளம் மாவட்டத்திற்கான செயற்திட்டம் ஜ/ன் 14, 15 ஆம் திகதிகள் சிலாபம் சார்லி குரேயா மைதானத்தில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்ப் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் இடம் பெற்றது. இதன்போது கற்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எச்.யூ பரீதா பாடசாலைக்கான ஸ்மார்ட் போர்டை அமைச்சரிடம் இருந்து பெற்றுக் கொண்டார் .

இந் நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அலி சப்ரி ரஹிம் மற்றும் சின்தக மாயாதுன்னே , புத்தளம் மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## சட்டவிரோதமாக உணவுப் பொருள்களை இறக்குமதிசெய்து விற்றவருக்கு தண்டம்

முறையான அனுமதியின்றி உணவு பொருளை இறக்குமதி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவருக்கு 12 ஆயிரம் ஷரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து நாட்டில் இருந்து முறையான இறக்குமதி அனுமதியின்றி உணவு உற்பத்தி பொருள்களை இறக்குமதி செய்து , யாழில் உள்ள பல்பொருள் அங்காடிகளுக்கு விற்பனை செய்து வந்த நபர் ஒருவருக்கு எதிராக மானிப்பாய் பொது சுகாதார பரிசோதகரால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வியாழக்கிழமை வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து , அவரை எச்சரித்த மன்று , 12 ஆயிரம் ஷரூபா தண்டம் விதித்தது.

(05)

# யாழ். பல்கலை ஊழியர் சங்கத்தினர் கவனவீர்ப்பு






யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் இந்த கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சம்பள முரண்பாடு, எம்.சி.ஏ. கொடுப்பனவை அதிகரித்து வழங்குதல் போன்ற பல நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் யாழ்.பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பேரணியாக சென்று பிரதான வாயிலில் கவனவீர்ப்பு போராட்டமாக இடம்பெற்றது.

இவர்கள், கடந்த மே மாதம் 02 முதல் தொடர் பகிஸ்கரிப்பு போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(05)

# அல் அஷ்ஹர் பாடசாலையில் புதிய கட்டத் திறப்பு விழா

சம்மாந்துறை நிருபர் தில்சாத் பர்வீஸ்



அல் அஷ்ஹர் வித்தியாலயத்திற்கு மாகாண கல்வி திணைக்களத்தால் கிடைக்கப் பெற்ற நிதியிலிருந்து அமைக்கப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் ஜப்பார் தலைமையில் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் கலந்துகொண்டு திறந்து வைத்ததுடன் பாடசாலையின் வளாகத்தினை மேற்பார்வை செய்ததுடன், பாடசாலையில் உள்ள குறைநிறைகளை கேட்டறிந்து கொண்டார்.

மேலும் பாடசாலையின் வளாகத்தில் பயன்தரக் கூடிய மரம் நடும் திட்டத்தின் அங்குரார்பன நிகழ்வும் இடம்பெற்றது, இதன் முதலாவது மரம் வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் கரங்களால் நடப்பட்டது.

நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக வருகை தந்த வலய கல்விப் பணிப்பாளரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. நிகழ்வில் உரை நிகழ்த்திய வலய கல்விப் பணிப்பாளர் 'பாடசாலையில் கட்டடம் என்பது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஒன்று. ஆகவே இதனூடாக மாணவர்களின் கல்வியில் சிறந்த பேறுகளை எதிர் பார்க்கிறோம்' என்றும் கூறினார்.

இந்நிகழ்வுக்கு பிரதிக் கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்) பி.எம். வை.அரபாத் முகைடீன், பிரதிக் கல்வி பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) பி.பரமதயாளன், பிரதிக் கல்வி பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) ஆ.நைஷரூஸ் கான், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# நீர்கொழும்பு கடலில் மூழ்கி இரண்டு மாணவர்கள் சாவு

நீர்கொழும்பு கடலில் வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணியளவில் நீர்கொழும்பு குடாப்பாடு மீனவர் துறைமுகத்திற்கு அருகில் கடலில் நீராடச் சென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களே உயிரிழந்தவர்களாவர்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் ஐந்து மாணவர்கள் குடாப்பாடு கடலில் நீராடச் சென்ற நிலையில், அவர்களில் இருவர் கடலில் மூழ்கியுள்ளனர்.

ஏனையவர்கள் அந்த இருவரையும் காப்பாற்ற முயற்சி செய்துள்ளனர். இந்நிலையில் பிரதேசவாசிகள் கடும் முயற்சி செய்து மூவரை காப்பாற்றி உள்ள நிலையில் இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நீர்கொழும்பு கடற்கரை தெருவை சேர்ந்த யோகநாதன் நிதிஷ் (வயது - 17), அஸரப்பா வீதியை சேர்ந்த ராஜதுரை அரவிந்தன் (வயது - 17) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். இறந்தவர்களின் சடலம் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (05)

# கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட நபர் கைது

*யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியில் நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர், நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் வியாழக்கிழமை கஞ்சாவை விற்பனைக்காக எடுத்து சென்ற போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைது செய்யப்பட்ட இளைஞன் வடமராட்சி கற்கோவளம் பகுதியை சேர்ந்தவர் என்பதுடன் இவர் நீண்ட நாட்களாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.*

*கைது செய்யப்பட்ட இளைஞனிடமிருந்து 2 கிலோ 300 கிராம் கஞ்சா நெல்லியடி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*கைதானவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)*

# யானை தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு







(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட வான்எல சூண்டியாற்று பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு யானை தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.இவ்வாறு உயிரிழந்தவர் கிண்ணியா இடிமனை சேர்ந்த இளம் குடும்பஸ்தரான (வயது-26)அப்துல் சத்தார் முகம்மது அயாஸ் என்பவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

தந்தையுடைய பண்ணைக்கு சென்றவேலையில் மறைந்திருந்த யானை இவரைத் தாக்கியுள்ளது.

இப்பகுதியில் இரண்டு வாரத்துக்குள் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# உழ்ஹிய்யா வழிகாட்டல் கருத்தரங்கு புத்தளத்தில்

(எம் சியாஜ்)

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் புத்தளம் நகர கிளையின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை புத்தளம் பெரிய பள்ளிவாசலில் இஷாத் தொழுகையை அடுத்து உழ்ஹிய்யா வழிகாட்டல் கருத்தரங்கு ஜம்மியத்துல் உலமாவின் புத்தளம் நகர கிளையின் தலைவர் அஷ்ஷேக் ஜிப்னாஸ்(மிஸ்பாஹி) தலைமையில் நடைபெற்றது.

புத்தளம் நகர சபையின் உயர் அதிகாரி எம். நௌஷாத் அவர்களால் உழ்ஹிய்யா கொடுப்பதற்கு முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டிய நாட்டு சட்டங்கள் பற்றிய தெளிவு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அஷ்ஷேக் எம். நஜிப்தீன் (ஹஸனி) அதிபர் அப்துல் மஜீத் எகடமி அவர்களால் உழ்ஹிய்யாவின் மார்க்க சட்டங்கள் பற்றிய விளக்கம் வழங்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் ஜம் இய்யத்துல் உலமா சபையால் தயாரிக்கப்பட்ட உழ்ஹிய்யாவின் சட்டங்கள் என்ற நூல் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வை சிறப்பாக செய்தமைக்கு அஷ்ஷேக் நஜிப்தீன் (ஹஸனி)க்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேக் ஜிப்னாஸ் (மிஸ்பாஹி) இனால் ஜம்இய்யாவின் நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டு கப்பாரத்துல் மஜ்லிஸ் துஆவுடன் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.06.2024இல் வெளியிடப்பெற்றது